# ஒலிபற்றியபெயர்த்தொகுதி.

சூத்திரம்.

(௧) விரித்தல் கதைத்த லுரை
த்தல்கூற, றெரித்தலாடனொடி
த்தனவிலல், சாற்றல் பணித்த
ன்மொழிதல்வலித்திட, லேற்
றமுந் நான்குஞ் சொல்லுதற்கி
லையும்.

(௨) சூ.

பகர்தல்செப்பலியம்பல்பர
வல், குயிறலிறுத்தல்கூறல் புக
றல், கட்டுரைவிளம்பல் கரைத
லோதல், சொற்றல்வழங்கல்வச
நங்காதை,பேசல்பேச்சுக்கிள
ப்பேயறைத, லிசைப்புத்தேர்
தன்மிழற்றல்வாணி,யசைப்பெ
ன்றின்னவைசொல்லென வறை
வர்.

(௩) சூ.

* குயில்வினாவெதிர்ப்புக் கீர்
நுவல்பாணி, யியம்வாக்கென்
பவுஞ்சொல்லின்பால.

(௪) சூ.

* பாழியுமுரையும்பதமென
வுரைப்பர்.

(௫) சூ.

* வார்த்தைவசநம்வசித்தல்
பாசுரஞ், சேர்த்தநான்கும் வா
சகஞ்செப்பும்.

(௬) சூ.

* மீதுரைபல்கால்விளம்புத
லாகும்.

பெயர்ப்பிரிவு.

சொல்லுதலின்பெயர்.

விரித்தல்-கதைத்தல்-உரை
த்தல்-கூறல்-தெரித்தல்-ஆடல்-
நொடித்தல்-நவிலல்-சாற்றல்-
பணித்தல்-மொழிதல்-வலித்தி
டல். ஆ. ௰௨.

சொல்லின்பெயர்.

பகர்தல்-செப்பல்-இயம்ப
ல்-பரவல்-குயிறல்-இறுத்தல்-
கூறல்-புகறல்-கட்டுரை-விளம்
பல்-கரைதல்-ஓதல்-சொற்றல்-
வழங்கல்-வசநம்-காதை-பேச
ல்-பேச்சு-கிளப்பு-அறைதல்-
இசைப்பு-தேர்தல்-மிழற்றல்-
வாணி-அசைப்பு. ௨௫.

மற்றுஞ்சொல்லின்பெயர்.

குயில்-வினா-எதிர்ப்பு-கீர்-
நுவல்-பாணி-இயம்-வாக்கு-
௮.

ஆ. ௩௩.

பதத்தின்பெயர்.

பாழி-உரை. ஆ. ௨.

வாசகத்தின்பெயர்.

வார்த்தை-வசநம்-வசித்த
ல்-பாசுரம். ஆ. ௪.

பல்கால்விளம்புதலின்பெயர்.

மீதுரை. (௧)



## ஒலிபற்றியபெயர்த்தொகுதி.

சூத்திரம்.

(௭)

ஆணைவிரதம்வட்டித்தல்சூள்
பிரமாணம்வஞ்சினஞ் சபதஞ்
சத்தியமே.

(௮) சூ.

வாய்மைசாதஞ்சரதமுண்மை
வா, யாணையுந்திடமும்மெய்யெ
னவறைவர்.

(௯) சூ.

* சத்தியமன்றநிலைமைவேளா
ண்மை, நிச்சயமென்பவு மெய்
யெனநிகழும்.

(௰) சூ.

மடிவஞ்சமாயமறுசிதம்படி
று, சடம்வக்கிரம்விகிர்த நிசித
ம்பொய்யே.

(௰௧) சூ.

மிச்சைவலக்காரந் தள்ளல்வ
ழுது, பெட்டுசாதனைபொய்யி
ன்கூற்றே.

(௰௨) சூ.

குஞ்சம் பிசுநங் குறளையாகு
ம்.

(௰௩) சூ.

கொடுவாயென்பது புறங்கூ
றலாகும்.

(௰௪) சூ.

கொண்டியந்தொடுப்பு வெ
றும்புறங்கூறல்.

(௰௫) சூ.

ஆசிடைவாழ்த்தே.

பெயர்ப்பிரிவு.

சத்தியத்தின்பெயர்.

ஆணை-விரதம்-வட்டித்தல்-
சூள்-பிரமாணம்-வஞ்சினம்-
சபதம். ஆ. ௭.

மெய்யின்பெயர்.

வாய்மை-சாதம்-சரதம்-
உண்மை-வாய்-ஆணை-திடம்-
௭.

மற்றுமெய்யின்பெயர்.

சத்தியம்-மன்ற-நிலைமை-
வேளாண்மை-நிச்சயம். ௫.

ஆ. ௰௨.

பொய்யின்பெயர்.

மடி-வஞ்சம்-மாயம்-அறுசி
தம்-படிறு-சடம்-வக்கிரம்-வி
கிர்தம்-நிசிதம். ௯.

மற்றும்பொய்யின்பெயர்.

மிச்சை-வலக்காரம்-தள்ள
ல்-வழுது-பெட்டு-சாதனை. ௬.

ஆ. ௰௫.

குறளையின்பெயர்.

குஞ்சம்-பிசுநம். ஆ. ௨.

புறங்கூறலின்பெயர்.

கொடுவாய். (௧)

வெறும்புறங்கூறலின்பெயர்.

கொண்டியம்-தொடுப்பு.

ஆ. ௨.

ஆசில்வாழ்த்தின்பெயர்.

ஆசிடை. ௧.

சூத்திரம்.

(௰௬) ——

* பல்லாண்டாசிகைவாரஞ் சோபநஞ், சொல்லிய நான்கும்வாழ்த்தினைச்செப்பும்.

(௰௭) சூ.

தேசிகந்திசைச்சொல்.

(௰௮) சூ.

வழுத்தல்பரவுத லேத்தறுதித்தல்.

(௰௯) சூ.

* போற்றல் பரசுதரோத்திர மெச்சல், சாற்றியநான்குமதன் பாற்சாரும்.

(௨௰) சூ.

பழிச்சல்புகழ்தல்வாழ்த்தெனப்படுமே.

(௨௧) சூ.

பலரறிசொற்பெருஞ்சொல்

(௨௨) சூ.

சிறுசொற்பழித்தல்.

(௨௩) சூ.

அம்பல்கௌவையேச்சலர்பழிச்சொல்.

(௨௪) சூ.

* பரிவாதந்தீச்சொல் பழிச்சொல்லாகும்.

(௨௫) சூ.

பிதற்றுதல் விடாது பேசலாகும்.

(௨௬) சூ.

அம்பல்சிலரறிந்து தம்முட்புறங்கூறல்.

பெயர்ப்பிரிவு.

மற்றும்ஆசில்வாழ்த்தின்பெயர்

பல்லாண்டு-ஆசிகை-வாரம்-சோபநம். ௪.

ஆ௫.

திசைச்சொல்லின்பெயர்.

தேசிகம். (௧)

துதித்தலின்பெயர்.

வழுத்தல்-பரவுதல்-எத்தல்- ௩.

மற்றுந்துதித்தலின்பெயர்.

போற்றல்-பரசுதல்-தோத்திரம்-மெச்சல். ௪.

ஆ௭.

வாழ்த்தின்பெயர்.

பழிச்சல்-புகழ்தல். ஆ௨.

பெருஞ்சொல்லின்பெயர்.

பலரறிசொல். (௧)

சிறுசொல்லின்பெயர்.

பழித்தல். (௧)

பழிச்சொல்லின்பெயர்.

அம்பல்-கௌவை-எச்சு-அலர். ௪.

மற்றும்பழிச்சொல்லின்பெயர்.

பரிவாதம்-தீச்சொல். ௨.

ஆ௬.

விடாதுபேசலின்பெயர்.

பிதற்றுதல். (௧)

சிலரறிந்துதம்முட்புறங்கூறலின்பெயர்.

அம்பல். (௧)



சூத்திரம்.

(௨௭) ——

அலரோ பலருமறிந்தலர் தூற்றல்.

(௨௮) சூ.

எயேசீச்சியென்னிளி யேளநம், மாயநான்குமிகழ்ச்சியினுகும்.

(௨௯) சூ.

அதிர்த்திடறெழித்த லூப்பலதட்டல்.

(௩௰) சூ.

இடக்கரென்பது மறைத்து மொழிகிளவி.

(௩௧) சூ.

மற்றுங்கூதந மறைத்துரைக்குஞ்சொல்.

(௩௨) சூ.

கீர்த்திமேம்பாடுமீக்கூற்றொளியிசை, சீர்த்தியென்றிவைபுகழெனச்செப்பினர்.

(௩௩) சூ.

தோற்றமுஞ் சொன்மாலையுமேற்றமாகும்.

(௩௪) சூ.

*மெய்ப்புசுலோகஞ்சீரேற்றமொழியென்ப.

(௩௫) சூ.

கியாதக்கிளவியேற்றங்கிளக்கும்.

(௩௬) சூ.

சீர்த்தியுங்கீர்த்தியு மிகுபுகழாகும்.

பெயர்ப்பிரிவு.

பலருமறிந்துபழிதூற்றுதலின்பெயர்

அலர். (௧)

இகழ்ச்சிச்சொல்லின்பெயர்.

எயே-சீச்சீ-ஏன்-இளி-எளநம். ஆ௫.

அதட்டலின்பெயர்.

அதிர்த்திடல்-தெழித்தல்-ஊப்பல். ஆ௩.

மறைத்துமொழியுஞ்சொல்லின்பெயர்.

இடக்கர். ௧.

மற்றுமறைத்துமொழியுஞ்சொல்லின்பெயர்.

கூதநம். ௧.

ஆ௨.

புகழின்பெயர்.

கீர்த்தி-மேம்பாடு-மீக்கூற்று-ஒளி-இசை-சீர்த்தி. ஆ௬.

எற்றமொழியின்பெயர்.

தோற்றம்-சொன்மாலை. ௨.

மற்றுமேற்றமொழியின்பெயர்

மெய்ப்பு-சுலோகம்-சீர். ௩.

ஆ௫.

எற்றத்தின்பெயர்.

கியாதம். (௧)

மிகுபுகழின்பெயர்.

சீர்த்து-கீர்த்தி. ஆ௨.

## ஒலிபற்றியபெயர்த்தொகுதி.

### சூத்திரம்.

(௩௭) ———
ஊற்றமேம்பாட்டின் பெயராகும்மே.

(௩௮) சூ.
ஓர்ப்புக் கடைப்பிடி குறிக்கோடேற்றமென், ஞர்த்தபுலவரறிந் துரைத்தனரே.

(௩௯) சூ.
மற்றென்கிளவியு மன்றவென்கிளவியுந், தெற்றென் கிளவியுந்தேற்றமாகும்.

(௪௰) சூ.
கழறலுமிடித்தலுமுறுதிக்கட்டுரை.

(௪௧) சூ.
நிழற்றலுமிழற்றலுநிரம்பாமென்சொல்.

(௪௨) சூ.
மழலைகொஞ்சல்குதலையுல்லாப, மிழலையெனவும்விளம்புமதற்கே.

(௪௩) சூ.
கூறியதுகூறல் புனருத்திக்கூற்றே.

(௪௪) சூ.
சூளேவஞ்சினஞ்சபதஞ்சூளுறவே.

(௪௫) சூ.
வாளாவென்கிளவிபேசாவென்றாகும்.

(௪௬) சூ.
விரிச்சியும்வாய்ப்புள்ளுநற்சொனிமித்தம்.

### பெயர்ப்பிரிவு.

மேம்பாட்டின்பெயர்.
ஊற்றம். (௧)

தேற்றத்தின்பெயர்.
ஓர்ப்பு-கடைப்பிடி-குறிக்கோள். ஆக ௫.

தேற்மொழியின்பெயர்.
மற்று-மன்ற-தெற்று. ஆக ௩.

உறுதிக்கட்டுரையின்பெயர்.
கழறல்-இடித்தல். ஆக ௨.

நிரம்பாமென்சொல்லின்பெயர்.
நிழற்றல்-மிழற்றல். ௨.

மற்றுநிரம்பாமென்சொல்லின் பெயர்.
மழலை-கொஞ்சல்-குதலை-உல்லாபம்-மிழலை. ௫.

ஆக ௭.

புனருத்தியின்பெயர்.
கூறியதுகூறல். (௧)

சூளுறவின்பெயர்.
சூள்-வஞ்சினம்-சபதம். ஆக ௩.

பேசாவென்பதின்பெயர்.
வாளா. (௧)

நன்னிமித்தத்தின்பெயர்.
விரிச்சி-வாய்ப்புள். ஆக ௨.



## ஒலிபற்றியபெயர்த்தொகுதி.

### சூத்திரம்.

(௪௭) ———
கூவலும்விளித்தலுமுளைத்தலுங்கரைதலும், வாவெனலுமழைத்தன்மாற்றமாகும்.

(௪௮) சூ.
கத்தல்கூப்பிடல் கதறலலறலொத்த நான்குங் கமையிலாதழைத்தல்.

(௪௯) சூ.
* இகுத்தல்கேதலாகருடணை, யகவலுமென்குமழைத்தலாகும்.

(௫௰) சூ.
அறைகூவல் பொரவழைத்தல்.

(௫௧) சூ.
அறைபோதல்கீழறுத்தல்.

(௫௨) சூ.
மொழிமைமுதுசொல்.

(௫௩) சூ.
கதைகாரணச்சொல்.

(௫௪) சூ.
முகமனுநன்னயக்கிளவியுமுபசாரம்.

(௫௫) சூ.
* சம்மானமுமுபசாரச்சொல்லே.

(௫௬) சூ.
அசதி நகைநயக் கிளவியாகும்.

### பெயர்ப்பிரிவு.

அழைத்தலின்பெயர்.
கூவல்-விளித்தல்-உளைத்தல்-கரைதல்-வாவெனல். ஆக ௫.

கமையிலாதழைத்தலின்பெயர்.
கத்தல்-கூப்பிடல் கதறல்-அலறல். ௪.

மற்றுங்கமையிலாதழைத்தலின்பெயர்.
இகுத்தல்-கேதல்-ஆகருடணை-அகவல் ௪.

ஆக ௮.

பொரவழைத்தலின்பெயர்.
அறைகூவல். (௧)

கீழறுத்தலின்பெயர்.
அறைபோதல். (௧)

முதுசொல்லின்பெயர்.
மொழிமை. (௧)

காரணச்சொல்லின்பெயர்.
கதை. (௧)

உபசாரச்சொல்லின்பெயர்.
முகமன்-நன்னயக்கிளவி. ௨.

மற்றுமுபசாரச்சொல்லின் பெயர்.
சம்மானம். ௧.

ஆக ௩.

நயச்சொல்லின்பெயர்.
அசதி-நகை. ஆக ௨.

## ஒலிபற்றியபெயர்த்தொகுதி.

### சூத்திரம்.

(௫௭) ——

வினவல்கடாவல்.

(௫௮) சூ.

விடையதற்கெதிர்மொழி.

(௫௯) சூ.

சல்லாபம்வினவிடைதழுவும்பொருளே.

(௬௰) சூ.

அநர்த்தம்பொருளின்மையாகுமென்ப.

(௬௧) சூ.

நெடுமொழிதன் மேம்பாடுதானிகழ்த்தல்.

(௬௨) சூ.

அன்றென்கிளவியுமின்றென்கிளவியு, மாமென் கிளவியுமாகுமசைச்சொல்.

(௬௩) சூ.

அம்மகேட்பிக்கும்.

(௬௪) சூ.

ஆங்கவுரையசை.

(௬௫) சூ.

மியாவிக மோமதியிகுஞ்சினென் னு, மாவயினாறு முன்னிலையசைச்சொல்.

(௬௬) சூ.

யாகாபிறபிறக்கவோபோமாதெனவரூஉ, மாயேழ்சொல்லு மசைநிலைக்கிளவி.

### பெயர்ப்பிரிவு

வினவலின்பெயர்.

கடாவல். (க)

வினவற்கெதிர்மொழியின் பெயர்.

விடை. (க)

வினவும்விடையுங்கூடிய பொருளின்பெயர்.

சல்லாபம். (க)

பொருளின்மையின்பெயர்.

அநர்த்தம். (க)

நெடுமொழியின்பெயர்.

தன்மேம்பாடுதானிகழ்த்தல் (க)

அசைச்சொல்லின்பெயர்.

அன்று - இன்று - ஆம். ஆக ௩.

கேட்பிக்குமுரையசைச்சொல்லின்பெயர்.

அம்ம. (க)

உரையசைச்சொல்லின்பெயர்.

ஆங்கு. (க)

முன்னிலையசைச்சொல்லின் பெயர்.

மியா-இக-மோ- மதி - இகும்-சின். ஆக ௬.

அசைநிலைச்சொல்லின்பெயர்.

யா-கா-பிற-பிறக்கு-அரோ-போ-மாது. ஆக ௭.



## ஒலிபற்றியபெயர்த்தொகுதி.

### சூத்திரம்.

(௬௭) ——

ஏயுங்குரையுமிசைநிறையசைநிலை.

(௬௮) சூ.

ஒப்பில்போலியு மப்பொருட்டாகும்.

(௬௯) சூ.

ஒடுவென்கிளவியுடனிகழ்வா
(௭௰) சூ. கும்.

இன்னே வற்றே யற்றேயம்மே, யொன்னேயானே யக்கேயிக்கே, யன்னென்கிளவி யுளப்படப்பிறவு, மன்னவென்ப சாரியைமொழியே.

(௭௧) சூ.

அம்ஆம் ஏம்எம் தம்நம் நும்மே, உம்மே அன்ஆன் உறைகெழு ஞான்றே, அல் ஆல் அன்றே ஏனவேமன்னே, தில்லைவான் பாக்குத் தெய்யவு மிடைச்சொல்.

(௭௨) சூ.

காரமுங்கரமுங்கானொடுசிவணி, நேரத்தோன்று மெழுத்தின்சாரியை.

(௭௩) சூ.

ஐயொடுகு இன் அதுகண்ணென் னு, மவ்வா றென்ப வேற்றுமையுருபே.

(௭௪) சூ.

அஇஉ அம்மூன் றுஞ்சுட்டே.

### பெயர்ப்பிரிவு.

இசைநிறையசைநிலையின் பெயர்.

ஏ-குரை. உ.

மற்றுமிசைநிறையசைநிலையின் பெயர்.

போலி. க.

ஆக ௩.

உடனிகழ்விடைச்சொல்லின் பெயர்.

ஒடு. (க)

சாரியைமொழியின்பெயர்.

இன் - வற்று - அற்று - அம். ஒன் - ஆன் - அக்கு - இக்கு - அன். ஆக ௯.

இடைச்சொல்லின்பெயர்.

அம் - ஆம் - ஏம் - எம் - தம் - நம் - நும் - ஏ - உம் - அன் - ஆன் - உறை - கெழு - ஞான்று - அல் - ஆல் - அன்று - ஏன - மன் - தில்லை - வான் - பாக்கு - தெய்ய. ஆக ௨௩.

எழுத்தின்சாரியையின்பெயர்.

காரம்-கரம்-கான். ஆக ௩.

வேற்றுமையின்பெயர்.

ஐ - ஒடு - கு - இன் - அது - கண். ஆக ௬.

சுட்டின்பெயர்.

அ-இ-உ. ஆக ௩.

ஒலிபற்றியபெயர்த்தொகுதி.

## சூத்திரம்.

(௭௫) ——

ஆ எ ஒ அம்மூன்றும் வினா.

(௭௬) சூ.

யாதுமெவனுங்கொல்லுமெ
ன்னையு, மாகுமென்பவையுற்ற
கிளவி.

(௭௭) சூ.

யாண்டையும்யாங்குமிடத்தி
னையுற்றசொல்.

(௭௮) சூ.

உறுதியுஞ்சால்பு மோதியும
றிவுங், கலையுங்கேள்வியுங்கல்வி
யாகும்.

(௭௯) சூ.

* வித்தைசாலம் விஞ்சையூறி
ய' மற்றிந் நான்குங் கல்வியினா
மம்.

(௮௰) சூ.

நவிலல்கெழுமல்பயிலலுங்க
ற்றல்.

(௮௧) சூ.

* பாடல்வாசித்தல்பயிலல்க
ற்ற, லோதலத்தியயநமும் படி
த்தல்.

(௮௨) சூ.

சுருதிமறைசாகை யெழுதாக்
கேள்வி.

(௮௩) சூ.

ஆதிநூலென்பதுவேதநூற்
பெயரே.

(௮௪) சூ.

* இருக்கோத்தாரணம்வேத
மென்ப.

## பெயர்ப்பிரிவு.

வினாவின்பெயர்.

ஆ-எ-ஒ. ஆக ௩.

ஐயுற்றசொல்லின்பெயர்.

யாது எவன்-கொல்-என்னை ஆக ௪.

இடத்தினையுற்றசொல்லின்
பெயர்.

யாண்டை-யாங்கு. ஆக ௨.

கல்வியின்பெயர்.

உறுதி-சால்பு-ஓதி- அறிவு-
கலை-கேள்வி. ௬.

மற்றுங்கல்வியின்பெயர்.

வித்தை-சாலம்-விஞ்சை-ஊறியம். ௪.

——

ஆக ௰.

கற்றலின்பெயர்.

நவிலல்-கெழுமல்-பயிலல். ஆக ௩.

படித்தலின்பெயர்.

பாடல்-வாசித்தல்- பயிலல்-
கற்றல்-ஓதல்-அத்தியயநம். ஆக ௬.

எழுதாக்கேள்வியின்பெயர்.

சுருதி-மறை-சாகை, ஆக ௩.

வேதநூலின்பெயர்.

ஆதிநூல். ௧.

மற்றும்வேதநூலின்பெயர்.

இருக்கு-ஒத்து-ஆரணம் ௩.

——

ஆக ௪.



ஒலிபற்றியபெயர்த்தொகுதி.

## சூத்திரம்.

(௮௫) ——

ஞாநபாகையுங்கருமபாகை
யு, மாயிருபாற்பொருள் வேத
நூற்கே.

(௮௬) சூ.

ஆரணம்வேதத்தின்ஞாநபா
கை.

(௮௭) சூ.

உபநிடதம் வேதத்தி னுட்
பொருணுட்பம்.

(௮௮) சூ.

வைதீகம்வேதமொழிமார்க்
கமாகும்.

(௮௯) சூ.

இருக்குமுதல்வேதம்பௌடி
கமெனப்படும்.

(௯௰) சூ.

இரண்டாம்வேதந் தைத்திரி
யமென்ப.

(௯௧) சூ.

மூன்றாவது சாமங் கீதநடை
சாரும்.

(௯௨) சூ.

நான்காம்வேதமதர்வணமெ
ன்ப.

(௯௩) சூ.

அதிகார மாரிடம் பனுவலா
கும்.

(௯௪) சூ.

பிடகந்தந்திர நூலின் பெய
ரே.

(௯௫) சூ.

* ஆகமம்பனுவலாரிடஞ்சமய

## பெயர்ப்பிரிவு.

வேதநூலினிருவகைப்பொ
ருளின்பெயர்.

ஞாநபாகை-கருமபாகை. ஆக ௨.

வேதத்தின்ஞாநபாகையின்
பெயர்.

ஆரணம். (௧)

உபநிடதத்தின்பெயர்.

வேதத்தினுட்பொருணுட்பம். (௧)

வைதீகத்தின்பெயர்.

வேதமொழிமார்க்கம். (௧)

முதல்வேதத்தின்பெயர்.

இருக்கு-பௌடிகம். ஆக ௨.

இரண்டாம்வேதத்தின்பெயர்.

தைத்திரியம். (௧)

மூன்றாம்வேதத்தின்பெயர்.

சாமம்-கீதவேதம். ஆக ௨.

நான்காம்வேதத்தின்பெயர்.

அதர்வணம். (௧)

பனுவலின்பெயர்.

அதிகாரம்-ஆரிடம் ஆக ௨.

நூலின்பெயர்.

பிடகம்-தந்திரம். ௨.

மற்றுநூலின்பெயர்.

ஆகமம்-பனுவல் - ஆரிடம்.

சூத்திரம்.

ஞ், சூத்திரமைந்து நூலினைத்து லக்கும்.

(௧௬) சூ.
படலஞ்சருக்கம் பரிச்சேதங் காண்ட,மிலம்பகமத்தியாயமெய்து நூன்முடிபே.

(௧௭) சூ.
பாயிர நூன்முகம் புறவுரையெனப்படும்.

(௧௮) சூ.
*பதிகம்புனைந்துரைதந்துரையுமதுவே.

(௧௯) சூ.
மூதுரைபழமொழிமுதுமையுமெனப்படும்.

(௨௰) சூ.
*மொழிமை முன்சொன்முதுசொல்பழஞ்சொன், மொழிந்தநான்குமம்மூதுரையென்ப

(௨௰௧) சூ.
ஓதன்மையாடல் பாடமாகும்.

(௨௰௨) சூ.
நூற்பாவகவனுணங்க நாடிற், சூத்திரங் குறித்த யாப்பிற்றாகி, யடிவரையின்றி விழுமிதி னடக்கும்.

(௨௰௩) சூ.
நேரினமணியைநிரல்படவைத்தாங், கோரினப் பொருளை யொருவழிவைப்ப,தோத்தென

பெயர்ப்பிரிவு.

சமயம்-சூத்திரம். ௫

ஆ. ௭.

நூன்முடிபின்பெயர்.
படலம்-சருக்கம்-பரிச்சேதம்-காண்டம்-இலம்பகம்-அத்தியாயம். ஆ. ௬.

பாயிரத்தின்பெயர்.
நூன்முகம்-புறவுரை. ௨.

மற்றும்பாயிரத்தின்பெயர்.
பதிகம்-புனைந்துரை-தந்துரை. ௩.

ஆ. ௫.

மூதுரையின்பெயர்.
பழமொழி-முதுமை. ௨.

மற்றுமூதுரையின்பெயர்.
மொழிமை-முன்சொல்-முதுசொல்-பழஞ்சொல். ௪.

ஆ. ௬.

பாடத்தின்பெயர்.
ஓதன்மையாடல். (௧)

நூற்பாவகவலென்பது.
சூத்திரங்குறித்த யாப்பிற்றாகியடிவரையின்றி நடப்பது.

ஒத்தென்பது.
ஓரினசாதியா யுள்ள மணிகளை வரிசையாக வைத்தாற் போல வோரினப்பொருளையொருவழி



சூத்திரம்.

மொழிபவுயர்மொழிப்புலவர்.

(௨௰௪) சூ.
ஒருநெறியின்றிவிரவியபொருளாற், பொதுமொழிதொடரினது படலமாகும்.

(௨௰௫) சூ.
சருக்கமுடிவினுமிலம்பகமுடிவினும், விருத்தநடையதுவேற்றிசைப்பாவே.

(௨௰௬) சூ.
விரித்துரைமெய்யுரையுரைப்பொருளாகும்.

(௨௰௭) சூ.
பொழிப்பெனப்படுவது பொருந்தியபொருளைப், பிண்டமாகக்கொண்டுரைப்பதுவே

(௨௰௮) சூ.
பதிகக்கிளவிபலவகைப்பொருளைத், தொகுதியாகச் சொல்லுதலாகும்.

(௨௰௯) சூ.
இலக்கியமுதாரணமெடுத்துக்காட்டல்.

(௩௰) சூ.
* இதிகாசமுமேயிலக்கியமாகும்.

(௩௰௧) சூ.
ஞாபகமும்பிசியுமரும்பொருணடைய.

(௩௰௨) சூ.
தூக்கும்யாப்புஞ் செய்யுளுங்கவியும், பாட்டுங் கவிதையும் பாவெனப்படுமே.

பெயர்ப்பிரிவு.

வைப்பது.

படலமென்பது.
ஒருநெறியேயன்றி யருத்தங்கள் விராய்ப் பொதுச்சொற்றொடர்வது.

வேற்றிசைப்பாவென்பது.
சருக்கமுடிவினுமிலம்பகத்தீற்றினும்விருத்தநடையது.

உரைப்பொருளின்பெயர்.
விரித்துரை-மெய்யுரை.

ஆ. ௨.

பொழிப்பென்பது.
பொருந்திய பொருளைப் பிண்டமாகக் கொண்டு கூறுவது.

பதிகமென்பது.
பலவகைப்பொருளைத் தொகுதியாகச்சொல்லுவது.

இலக்கியத்தின்பெயர்.
உதாரணம்-எடுத்துக்காட்டல். ௨.

மற்றுமிலக்கியத்தின்பெயர்.
இதிகாசம். ௧

ஆ. ௩.

அரும்பொருளின்பெயர்.
ஞாபகம்-பிசி. ஆ. ௨.

பாவின்பெயர்.
தூக்கு-யாப்பு-செய்யுள்-கவி-பாட்டு-கவிதை. ஆ. ௬.

### சூத்திரம்.

(௱௧௩) ——

முதற்பாவெண்பா.

(௱௧௪) சூ.

மூட்டைகலிப்பா.

(௱௧௫) சூ.

அகவலுந் தொகையு மாசிரி யுப்பாவே.

(௱௧௬) சூ.

ஆரக முடுகியல்வண்ணகமா குடம்.

(௱௧௭) சூ.

குற்றெழுத் துத் தொடரின துளகச்செய்யுள்.

(௱௧௮) சூ.

இருபதின் மேலு மிருமூன் றெழுத் துநான், கடியும் வருவ துசந்தப்பாட்டே.

(௱௧௯) சூ.

மற்றதன் மிகுதிச்சொற் பெயர் தாண்டகம்.

(௱௨௰) சூ.

எழுத்து மெண் ணுங் கணக் கெனப்படுமே.

(௱௨௧) சூ.

எண்ணே கரணங் கணிதமல கே.

(௱௨௨) சூ.

பெயரொழுத்துமுடிவெழுத் துவடிவெழுத் துத்தன்மை,யெ ழுத்தெனவெழுத்தின்பெயரிய ம்பினரே.

(௱௨௩) சூ.

விராமமும்புலுதமுமெய்யு மொற்றெழுத்தே.

### பெயர்ப்பிரிவு.

வெண்பாவின்பெயர்.

முதற்பா. (௧)

கலிப்பாவின்பெயர்.

மூட்டை. (௧)

ஆசிரியப்பாவின்பெயர்.

அகவல்-தொகை. ஆ. ௨.

வண்ணகத்தின்பெயர்.

ஆரகம்-முடுகியல். ஆ. ௨.

துளகச்செய்யுளென்பது.

குற்றெழுத்துத்தொடர்ந்து வருவது.

சந்தப்பாட்டென்பது.

இருபத்தாறெழுத்து நான்க டியாகிவருவது.

தாண்டகமென்பது.

இருபத்தாறெழுத்தின்மிக்கு வருவது.

கணக்கின்பெயர்.

எழுத்து எண். ஆ. ௨.

எண்ணின்பெயர்.

கரணம்-கணிதம்-அலகு. ஆ. ௩.

எழுத்தாவன

பெயரொழுத்து-முடிவெ ழுத்து-வடிவெழுத்து-த ன்மையெழுத்து.

ஒற்றெழுத்தின்பெயர்

விராமம்-புலுதம்-மெய். ஆ. ௩.



### சூத்திரம்.

(௱௨௪) ——

✻ தனிநிலைபுள்ளியாய்தமொற் றெழுத்தே.

(௱௨௫) சூ.

நல்லவருறையுலக மெய்தப் புலவ, ரொழுக்கங்கொளுத்து முறையுயர்மொழிக்காஞ்சி.

(௱௨௬) சூ.

கழிந்தோரோனை யொழிந்தோ ர்க்குக்காட்டிய,முறைமையாகு முதுமொழிக்காஞ்சி.

(௱௨௭) சூ.

கேட்டியல்புரைத்ததுபேரிய ற்காஞ்சி.

(௱௨௮) சூ.

அருண்மொழி மெய்ப்பொ ருள்பொருண்மொழிக்காஞ்சி

(௱௨௯) சூ.

தனிமிகுசாத்திடைக் கணவ னையிழந் து,தனிமகள்புலம்பன் முதுபாலையாகும்.

(௱௩௰) சூ.

தன் னுதற் றுறந்தவட் குற்றி சைப்புழியவண் , முன்னின்று ரைத்தல்குறுங்கலியாகும்.

(௱௩௧) சூ.

பாசறைமுல்லைத்தலைவன்பா சறைக்கண், மாதரையுள்ளு மா [பிற்றாகும்.

(௱௩௨) சூ.

இல்லாண்முல்லை பாசறைத்த லைவனை, நல்லாணினையு நலத்த தாகும்.

### பெயர்ப்பிரிவு.

மற்றுமொற்றெழுத்தின் பெயயர்.

தனிநிலை-புள்ளி-ஆய்தம். ௩. ஆ. ௬.

உயர்மொழிக்காஞ்சி யென்பது.

நல்லவருறையுலகமெய்தப்பு லவரொழுக்கங் கொளுத்து மு றையதாம்.

முதுமொழிக்காஞ்சியென்பது

கழிந்தோ ரோனை யொழிந் தோர்க்குக்காட்டிய முறைமை யாகும்.

பேரியற்காஞ்சியென்பது.

கேட்டியல்புரைத்தது.

பொருண்மொழிக்காஞ்சி யென்பது.

அருண்மொழி மெய்ப்பொ ருளுரைப்பது.

முதுபாலையென்பது.

சாத்திடைக்கணவனையிழந் துதனிமகள்புலம்புவது.

குறுங்கலியென்பது.

தன் னுதலைத் துறந்தவளைக்க ண்டிசைப் புழியவண் முன்னி ன் றுரைத்தது.

பாசறைமுல்லையென்பது.

தலைவன்பாசறைக்கண்டலைவி யையுள்ளுமரபிற்று.

இல்லாண்முல்லையென்பது.

பாசறைத்தலைவனை நல்லாணி னையுநலத்தது.

சூத்திரம்.

(௱௩௩) ———

ஊழ்முறையுலக்கையோச்சி வாழிய, தருமனைக்கிழவர் தம் வளங்கூறி, மகளிர்பாடுவதுவள்ளைப்பாட்டே.

(௱௩௪) சூ.

பாணிவரி பண்ணிசை காநங் கொளையே, பாணேகீதங்கந்தருவங்கேயங்,காமரமென்றிவை யிசைப்பாட்டாகும்.

(௱௩௫) சூ.

எனையென்பதோரிசை விகற்பமாகும்.

(௱௩௬) சூ.

உச்சந்தாரமோங்கும் வல்லிசை.

(௱௩௭) சூ.

காகுளிமந்தவிசை.

(௱௩௮) சூ.

இராகமின்னிசை.

(௱௩௯) சூ.

மந்தமத்திமம்வழங்குஞ்சமனிசை.

(௱௪௰) சூ.

சங்கீதம்பல்லியந்தழுவுபாடல்.

(௱௪௧) சூ.

யாழாலேதந்திரி நரம்பினோசை.

(௱௪௨) சூ.

நிறைநரம்பிற்றே பண்ணெனலாகும்.

பெயர்ப்பிரிவு.

வள்ளைப்பாட்டென்பது.

ஊழ்முறையுலக்கையோச்சிமனைக்கிழவர்தம்வளங்கூறி மகளிர்பாடுவது.

இசைப்பாட்டின்பெயர்.

பாணி-வரி-பண்-இசை-கானம்-கொளை-பாண்-கீதம்-கந்தருவம்-கேயம்-காமரம்.
ஆ. ௰௧.

எனையென்பது.

ஓரிசைவிகற்பமாம்.

வல்லிசையின்பெயர்.

உச்சம்-தாரம். ஆ. ௨.

மந்தவிசையின்பெயர்.

காகுளி. (௧)

இன்னிசையின்பெயர்.

இராகம். (௧)

சமனிசையின்பெயர்.

மந்தம்-மத்திமம். ஆ. ௨.

பல்லியந்தழுவுபாடலின் பெயர்.

சங்கீதம். (௧)

நரம்பினோசையின்பெயர்.

யாழால்-தந்திரி. ஆ. ௨.

பண்ணென்பது.

நிறைநரம்பிற்று. (௧)



சூத்திரம்.

(௱௪௩) ———

குறைநரம்பிற்றே திறமெனப்படுமே.

(௱௪௪) சூ.

பேரியாழ் சகோடயாழ்மருதயாழ்செங்கோட்டியாழெனு நான்கு நால்வகையாழ்ப்பெயர்

(௱௪௫) சூ.

யாமையாழ்ப்பெயர் குறிஞ்சியாழுஞ், செவ்வழியாழ்ப்பெயர்முல்லையாழும்,பாலையாழுமருதயாழுமென ; நால்வகையாழ்நாற்பெரும்பண்ணே.

(௱௪௬) சூ.

திறனில் யாழே நெய்தல்யாழாகும்.

(௱௪௭) சூ.

நைவளங்காந்தாரமெய்படுமலையம்,பஞ்சுரமருளயிர்ப்பாற்றுச்செந்திற,மென்றிவையெட்டுங்குறிஞ்சியாழ்த்திறனே.

(௱௪௮) சூ.

நேர்திறம் பெயர்திறம் யாமையாழ்சாதாரி, யென்றிவை நான்கு முல்லையாழ்த்திறனே.

(௱௪௯) சூ.

ஆரகநேர்திற முறுப்புக்குறுங்கலி, யாசானந்தும் பாலையாழ்த்திறனே, படுமலைப்பாலை செவ்வழிப்பாலை, செம்பாலைவிளரிப்பாலைகொடிப்பாலை, மேற்செம்பாலையரும்பாலை யென்றிவை; யேழும்பாலையாழ்த்திறனென்ப.

பெயர்ப்பிரிவு.

திறமென்பது.

குறைநரம்பிற்று.

நால்வகையாழின்பெயர்.

பேரியாழ்-சகோடயாழ்-மருதயாழ்-செங்கோட்டியாழ்.
ஆ. ௪.

நாற்பெரும்பண்ணின்பெயர்.

யாமை-அல்லது-குறிஞ்சியாழ்-செவ்வழி-அல்லது-முல்லையாழ்-பாலையாழ்-மருதயாழ். ஆ. ௪.

நெய்தல்யாழின்பெயர்.

திறனில்யாழ். (௧)

குறிஞ்சியாழ்த்திறனின்பெயர்.

நைவளம்-காந்தாரம்-மலையம்-பஞ்சுரம்-மருள்-அயிர்ப்பு ஆற்று-செந்திறம். ஆ. ௮.

முல்லையாழ்த்திறனின் பெயர்.

நேர்திறம்-பெயர்திறம்-யாமையாழ்-சாதாரி. ஆ. ௪.

பாலையாழ்த்திறனின்பெயர்.

ஆரகம்-நேர்திறம்-உறுப்பு-குறுங்கலி-ஆசான். ௫.

படுமலைப்பாலை-செவ்வழிப்பாலை-செம்பாலை-விளரிப்பாலை-கொடிப்பாலை-மேற்செம்பாலை-அரும்பாலை. ௭.
ஆ. ௰௨.

சூத்திரம்.

(௩௫௰) ——

நவிர்படு குறிஞ்சி பியந்தை
யிற்றான்கு, மருதயா ழின்றிற
னாகும்மே.

(௩௫௧) சூ.

திறனில்யாழ்விளரிநெய்தனி
லஞ்சிவனும்.

(௩௫௨) சூ.

செந்துறைவெண்டுறைபாட
ற்கேற்பன, வம்மென்பாட்டே
யாடற்கேற்பன.

(௩௫௩) சூ.

அருமையிற்பாடலகமார்க்
கமாகும்.

(௩௫௪) சூ.

குரலேதுத்தங் கைக்கிளை யு
ழையே,யிளியேவிளரிதாரமெ
ன்றிவை, யெழுவகை யிசைக்கு
மெய்தும்பெயரே.

(௩௫௫) சூ.

சங்கு குயின்மயில்யானைபுர
வி, யங்கவன்னங் காடை யவற்
றோசை.

(௩௫௬) சூ.

* வண்டுகிள்ளை வாசிமதயா
னை, தவளை தேனுவாடேழிசை
யோசை.

(௩௫௭) சூ.

சவ்வும்ரிவ்வுங் கவ்வு மவ்வும்,
பவ்வுந்தவ்வுநிவ்வு மென்றிவை,
யேழுமவற்றி னெழுத்தேயாகு
ம்.

பெயர்ப்பிரிவு.

மருதயாழ்த்திறனின்பெயர்.

நவிர்-படு-குறிஞ்சி - பியந்
தை. ஆக ௪.

நெய்தல்யாழ்த்திறனின்
பெயர்.

திறனில்யாழ்-விளரி. ஆக ௨.

பாடலாடற்றுறைப்பாட்டிற்
கேற்பன.

செந்துறை-வெண்டுறை.

அகமார்க்கமென்பது.

அருமையிற்பாடுவது.

எழிசையின்பெயர்.

குரல் - துத்தம் - கைக்கிளை -
உழை-இளி-விளரி-தாரம்.
ஆக ௭.

அவற்றினோசையின்பெயர்.

சங்கு-குயில்-மயில்-யானை-
புரவி-அன்னம்-காடை. ௭.

மற்றுமேழிசையோசையின்
பெயர்.

வண்டு-கிள்ளை-வாசி-மதயா
னை-தவளை-தேனு-ஆடு. ௭.

ஆக ௰௪.

அவற்றினெழுத்தின்பெயர்.

ச-ரி-க-ம-ப-த-நி. ஆக ௭.



சூத்திரம்.

(௩௫௮) ——

* வண்டுகிள்ளைவாசிமால்யா
னை, தவளைதேநுவோடாடிசை
யோசை.

(௩௫௯) சூ.

ஆ ஈ ஊ எ ஐ ஒ ஔ என்னு,
மிவ்வேழெழுத்துமேழிசைக்கு
ரிய.

(௩௬௰) சூ.

மிடறுந் தாலு மண்ணமுஞ்
சிரமு, நெற்றியுநெஞ்சு நாசியு
முறையே, குரலாதி யேழிசைக்
குப்பிறப்பிடமே.

(௩௬௧) சூ.

இளிதுத்தங்குரற்கேற்குநந்
நான்கே, கிளையும்விளரியுமும்
மூன்றுழையுந், தாரமுமிவ்விர
ண்டேழிசைமாத்திரை.

(௩௬௨) சூ.

மௌவன் முல்லைகடம்புவஞ்
சி, நெய்தல் வீணை புன்னையுமி
சைமணம்.

(௩௬௩) சூ.

விசுவாமித்திரனிய மனங்கி,
சசியேவெய்யோன்கௌதமன்
காசிபனிவ்வேழ்பெயரு மேழி
சைக்கீசர்.

(௩௬௪) சூ.

தக்கராகந்துக்கராகம்,பழைந்
தக்கராக நட்டராகங், கின்னரா
கஞ்சங்கின்னராக, திருபதுங்க
ராகமென்ன வருபவை, யிராக
ப்பெயரென விசைத்தனர் புல
வர்.

பெயர்ப்பிரிவு.

மற்றுமேழிசையோசையின்
பெயர்.

வண்டு-கிள்ளை-வாசி-யானை
-தவளை-தேநு-ஆடு. ஆக ௭.

இவற்றினெழுத்தின்பெயர்.

ஆ-ஈ-ஊ-எ-ஐ-ஒ-ஔ.
ஆக ௭.

இவற்றின்பிறப்பிடத்தின்
பெயர்.

மிடறு-தால்-அண்ணம்-சிர
ம்-நெற்றி-நெஞ்சு-நாசி.
ஆக ௭.

இவற்றின்மாத்திரையின்
பெயர்.

குரல்-௪-துத்தம்-௪. கைக்கி
ளை-௩. உழை-௨. இளி-௪. விளரி-
-௩. தாரம்-௨.

இவற்றின்மணத்தின்பெயர்.

மௌவல்-முல்லை - கடம்பு-
வஞ்சி-நெய்தல்-வீணை-புன்னை-
ஆக ௭.

இவற்றிற்கீசரின்பெயர்.

விசுவாமித்திரன் - இயமன் -
அங்கி-சசி-வெய்யோன்-கௌ
தமன்-காசிபன். ஆக ௭.

இராகத்தின்பெயர்.

தக்கராகம்-துக்கராகம்-பழை
ந்தக்கராகம்-நட்டராகம்-கின்
னராகம்-சங்கின்னராகம் - திரு
பதுங்கராகம். ஆக ௭.

## ஒலிபற்றியபெயர்த்தொகுதி.

| சூத்திரம். | பெயர்ப்பிரிவு. |
|---|---|
| (௱௬௫) —— சாயவேளர் கொல்லிசித்திரவேளர்கொல்லி, யித்திறங்கொல்லிப் பெயரான விசைப்பர். | கொல்லிவகையின் பெயர். சாயவேளர்கொல்லி- சித்திரவேளர்கொல்லி. ஆக ௨. |
| (௱௬௬) சூ. ஆரியவராடிகொல்லிவராடி, தீபவராடியென் றுந்திறமு,மாரும்வராடிக்கமைத்தபல் பெயரே. | வராடிவகையின் பெயர். ஆரியவராடி - கொல்லிவராடி- தீபவராடி. ஆக ௩. |
| (௱௬௭) சூ. சாவகன்குறிஞ்சிமேகராகக்குறிஞ்சி, வியாழக்குறிஞ்சி யந்தாளிக்குறிஞ்சி,யாகுங்குறிஞ்சிக்கமைத்தபல்பெயரே. | குறிஞ்சிவகையின் பெயர். சாவகன்குறிஞ்சி - மேகராகக்குறிஞ்சி-வியாழக் குறிஞ்சி-அந்தாளிக்குறிஞ்சி. ஆக ௪. |
| (௱௬௮) சூ. காந்தாரபஞ்சமமுருத்திர பஞ்சமம். | பஞ்சமத்தின்பெயர். காந்தாரபஞ்சமம் - உருத்திர பஞ்சமம். ஆக ௨. |
| (௱௬௯) சூ. பஞ்சமங்காம்போதிபாண்டி தக்கேசி. | தக்கேசியின்பெயர். பஞ்சமம்- காம்போதி - பாண்டி. ஆக ௩. |
| (௱௭௰) சூ. இந்தளமருளிந்தளமேயர்கும். | இந்தளத்தின்பெயர். மருளிந்தளம். (௧) |
| (௱௭௧) சூ. இராமக்கிரிதேசாக்கிரிகொண்டைக், கிரிமருடாரமக்கிரியந்தாளி.பாடைநட்டபாடையருமவதி, செந்துருதிசிகாமாஞ்சிகண்டி, காந்தாரம்புறநீர்மைகுறண்டிகௌசிக, நாட்டைசாதாரிசாயரிகுச்சரி, நருத்தைபழைம்பஞ்சுரம்பஞ்சுரங் கவ்வாணங், கொல்லிகவ்வாணங் காஞ்சிக்கவு | பண்ணின்பெயர். இராமக்கிரி - தேசாக்கிரி - கொண்டைக்கிரி - மருடாரமக்கிரி-அந்தாளிபாடை- நட்டபாடை-அருமவதி-செந்துருதி- சிகாமாஞ்சிகண்டி-காந்தாரம்-புறநீர்மை-குறண்டி-கௌசிகம்- நாட்டை-சாதாரி-சாயரி- குச்சரி- நருத்தை- பழம்பஞ்சுரம்- பஞ்சுரம்-கவ்வாணம் - கொல்லி |



## ஒலிபற்றியபெயர்த்தொகுதி.

| சூத்திரம். | பெயர்ப்பிரிவு. |
|---|---|
| டிக, மலகரிபயிரவிகாம்போதி யென்னப், பண்ணுந்திறமும்பிறவும்பண்ணே. | கவ்வாணம் - காஞ்சிக் கவுடிகம்- மலகரி-பயிரவி-காம்போதி. ஆக ௨௬. |
| (௱௭௨) சூ. கலித்தல்சும்மைகம்பலையழுங்கல், சிலைத்தறுவைத்தல் சிலம்பலிரங்க, லிமிழ்த்தல் விம்மலிரட்டலேங்கல், கனைத்தறழங்கல் கறங்கலாற்ற, லிசைத்தலென்றிவையொலித்தலையிசைக்கும். | ஒலித்தலின்பெயர். கலித்தல் சும்மை - கம்பலை- அழுங்கல்-சிலைத்தல்- துவைத்தல்-சிலம்பல்-இரங்கல்- இமிழ்த்தல்-விம்மல்-இரட்டல்-ஏங்கல் கனைத்தல்-தழங்கல் - கறங்கல்- ஆற்றல் - இசைத்தல் ௰௭. |
| (௱௭௩) சூ. *சாற்றறெறித்ததெழித்தல் குமுற, லூற்றலுளைத்தலுரைத்தலேங்க, லிரைத்தலுலம்பலிடித்தன்முழக்கல், குரைத்ததெவிட்டல்குளிறலியம்பல், சிலம்பலலம்பல் சிதைத்தல்புலம்ப, லிலங்கிந்நாலைந் தொலித் தலுக் கேற்கும். | மற்றொலித்தலின்பெயர். சாற்றல்-தெறித்தல்-தெழித்தல்-குமுறல்-ஊற்றல்-உளைத்தல்-உரைத்தல்-ஏங்கல்- இரைத்தல்-உலம்பல்-இடித்தல் - முழக்கல்-குரைத்தல்- தெவிட்டல்- குளிறல்- இயம்பல்- சிலம்பல்- அலம்பல்-சிதைத்தல்-புலம்பல் ௨௰. |
| (௱௭௪) சூ. ஓதைநாதங்கம்பலையோலே, யாகுலம்புலம்பல்கோடணையரவ,மோசைகர்ச்சனையொலியென்கிளவி. | ஒலியின்பெயர். [ஆக ௩௭. ஓதை-நாதம்-கம்பலை- ஒலி- ஆகுலம்-புலம்பல்- கோடணை- அரவம்-ஓசை-கர்ச்சனை. ௰. |
| (௱௭௫) சூ. *சுருதிதழனிதொநியாரவார, மிரையுரைசும்மை யிசைகளன்வகுணி, பாட்டிடியாமிண் டொலியினைப்பகரும். | மற்றொலியின்பெயர். சுருதி- தழனி - தொநி- ஆரவாரம்-இரை- உரை - சும்மை- இசை-களன்- வகுணி- பாட்டு- இடி. ௰௨. ஆக ௨௨ |
| (௱௭௬) சூ. மருமாஞ்சம் வழங்குஞ்சிலையொலி. | சிலையொலியின்பெயர். மருமாஞ்சம். (௧) |

சூத்திரம்.

(௱௭௭)

முரல்வுநரல்வுந்தெளிரு ளொலிரு, முழைவு நுணுக்கமு முள்ளோசையாகும்.

(௱௭௮) சூ.

பிளிறலுங்குளிறலும் பிறற்றலுஞ்சிற்றலு, மருளலும் பயிறலுங்குறைத்தலுங் கனைத்தலு, முழைத்தலு மகவலு மெழுத்திலாவோசை.

(௱௭௯) சூ.

அதிர்ச்சி யழுங்க னொலியவ லூற்றல், குரைத்தறழங்கல் பிளிறறுவைத்தல்,கலித்தல்கனைத லோதைபராரை, தெளித்தல்புலம்பல்பூசறமரங், கனைத்தல்சிள்ளெனவொலிகோலாகல, டிமைத்துந்திமிலமொடாரவாரம்.

(௱௮௰) சூ.

தமரம்பூசலார்ப்புக் கர்ச்சனை, குமுறலுலம்பல் கோடணை கோலா, கலமெழுந்தல்கலகமாகுலமோ, டூறுதன் மூந்நான் கொன்றலாப்பேரொலி.

(௱௮௧) சூ.

இம்மெனல்கல்லென விழுமெனல்வல்லெனல், பொம்மெனலொல்லெனல் பொள்ளெனன் ஞொள்ளென, லவ்வநுகரணவோசையாகும்.

பெயர்ப்பிரிவு.

உள்ளோசையின்பெயர்.

முரல்வு - நரல்வு - தெளிர் - ஒலிர் - உழைவு - நுணுக்கம். ஆ ௬.

எழுத்திலாவோசையின்பெயர்.

பிளிறல் - குளிறல் - பிறற்றல் - சிற்றல் - மருளல் - பயிறல் - குரைத்தல் - கனைத்தல் - முழைத்தல் - அகவல். ஆ ௰.

ஆரவாரத்தின்பெயர்.

அதிர்ச்சி - அழுங்கல் - ஒலியல் - ஊற்றல் - குரைத்தல் - தழுங்கல் - பிளிறல் - துவைத்தல் - கலித்தல் - கனைதல் - ஓதை - பராரை - தெளித்தல் - புலம்பல் - பூசல் - தமரம் - கனைத்தல் - சிள்ளெனல் - ஒலி - கோலாகலம் - திமிலம். ஆ ௨௧.

ஒன்றலாப்பேரொலியின் பெயர்.

தமரம் - பூசல் - ஆர்ப்பு - கர்ச்சனை - குமுறல் - உலம்பல் - கோடணை - கோலாகலம் - தெழித்தல் - கலகம் - ஆகுலம் - ஊறுதல். ஆ ௰௨.

அநுகரணவோசையின்பெயர்.

இம்மெனல் - கல்லெனல் - இழுமெனல் - வல்லெனல் - பொம்மெனல் - ஒல்லெனல் - பொள்ளெனல் - ஞொள்ளெனல் ஆ ௮.



சூத்திரம்.

(௱௮௨) சூ.

கொம்மெனல் விடேலென னெரோலெனன்முகேரென, லம்மெனல்சரேலென லநுகரணவோசை.

(௱௮௩) சூ.

படபடெனல்களகளெனல் பதபதெனல்கொளகொளெனன், மொடுமொடெனதிடுதிடெனன் மொகமொகெனல் கலகலென, நெடநெடெனல்கடகடெனனிறையுபயவோசை.

பெயர்ப்பிரிவு.

மற்றுமநுகரணவோசையின் பெயர்.

கொம்மெனல் - விடேலெனல் - நெரோலெனல் - முகேரெனல் - அம்மெனல் - சரேலெனல். சூ. ஆ ௰௪.

உபயவோசையின்பெயர்.

படபடெனல் - களகளெனல் - பதபதெனல் - கொளகொளெனல் - மொடுமொடெனல் - திடுதிடெனல் - மொகமொகெனல் - கலகலெனல் - நெடநெடெனல் - கடகடெனல். ஆ ௰.

ஆக்கமைப்பொருதமுரட்போர்விலுநம் . . . . . . . . . . *
பாரதம்பொருதபேரிசைச்சிலையுந் . . . . . . . . . . . *
தாருகற்கடிந்தவீரத்தயிலும் . . . . . . . . . . . . . *
பாடியபுலவன்பதியம்பற்சேந்தன் . . . . . . . . . . . *
பயில்வுற்றதிவாகரத்துப்பத்தாவ . . . . . . . . . . . *
தொலிபற்றியபெயர்த்தொகுதிமுற்றிற்று . . . . . . . . *

| | | |
|---|---|---|
| முதலாவது. | தெய்வப்பெயர்த்தொகுதி. சூத்திரம். | ஈகுகூ. |
| இரண்டாவது. | மக்கட்பெயர்த்தொகுதி . . . . . . . . . . . . | உாநக. |
| மூன்றாவது. | விலங்கின்பெயர்த்தொகுதி . . . . . . . . . . . . | உாஉகூ. |
| நான்காவது. | மரப்பெயர்த்தொகுதி . . . . . . . . . . . . | உாடுஅ. |
| ஐந்தாவது. | இடப்பெயர்த்தொகுதி . . . . . . . . . . . . | உாசகூ. |
| ஆறாவது. | பலபொருட்பெயர்த்தொகுதி . . . . . . . . . . . . | ாஉஅ. |
| ஏழாவது. | செயற்கைவடிவப்பெயர்த்தொகுதி . . . . . . . . . . . . | நாச. |
| எட்டாவது. | பண்புபற்றியபெயர்த்தொகுதி . . . . . . . . . . . . | உாகூச. |
| ஒன்பதாவது. | செயல்பற்றியபெயர்த்தொகுதி . . . . . . . . . . . . | உாஅஎ. |
| பத்தாவது. | ஒலிபற்றியபெயர்த்தொகுதி . . . . . . . . . . . . | ாஅந. |

ஆ தொகுதி பத்துக்குச் சூத்திரம் . . . . உதஉாஅகூ.

முற்றிற்று.